IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 231/2018

சாட்சி : DW1

பெயர் : சின்னமுத்து தேதி: 04-03-2025

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வா.த.சா.ஆ-A1 கிரய உடன்படிக்கையில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதுதான். வாதி எனக்கு தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக வா.த.சா.ஆ-A2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் எதுவும் தரவில்லை என்றால் ஆமாம். வாதியின் கணவர் பெயர் தங்கமணி. வா.த.சா.ஆ-A1 கிரய உடன்படிக்கையில் தங்கமணி சாட்சி கையெழுத்து போடவில்லை. வா.த.சா.ஆ-A1 கிரய உடன்படிக்கையில் என்னுடைய அப்பா பச்சமுத்து 1வது சாட்சியாக சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். என் அப்பாவை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஓம்/- A.M. ரவி,<br>இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>சேலம்.